# பல்லின சமூகச் சூழலில் சமயக் கலந்துரையாடலும் இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் அதன் நடைமுறையும் : ஓர் இஸ்லாமிய நோக்கு

# Interfaith Dialogue in a Multicultural Social Context and Its Practice in Sri Lankan State Universities: An Islamic Perspective

Mujahid, A.L.M[1], Aliyar, A.[2], Mohamed Helfan, M.L[3]

[1]Senior Lecturer in Islamic Studies, Department of Islamic Studies, Eastern University, Sri Lanka.

[2] M.Phil Student, Department of Arabic & Islamic Civilization, Faculty of Arts, University of Peradeniya.

[3]Lecturer (Probationary) in Islamic Studies, Department of Islamic Studies, Eastern University, Sri Lanka.

1mujahidm@esn.ac.lk, 2aliyarbinasanar@gmail.com, 3helfanmlm@esn.ac.lk

***Abstract***

*In today's modern world, excessive religious and ethnic chauvinism, along with prejudice between communities, has led to increased violence and conflict within societies. This trend is steering countries with multi-ethnic social structures, like Sri Lanka, towards destruction and has become a significant threat to national peace and security. Therefore, it has been widely emphasized that interfaith dialogue should be prioritized in multi-ethnic societies to prevent escalation into outright conflict. This study aims to present Islamic guidelines on the necessity of interfaith dialogue in a multi-ethnic context and to assess the practical stance of Muslim students in this regard at Sri Lankan state universities. To achieve the objectives of this research, a mixed-method approach was employed. Primary data were gathered through questionnaires and interviews, while secondary data were derived from previous literature. A total of 308 Muslim students from 12 faculties across 17 state universities in Sri Lanka were selected for data collection via questionnaires. The collected data were analyzed using Microsoft Excel. Additional data were obtained through direct observation and elaborated within the study. The findings reveal that Muslim students studying at Sri Lankan state universities, guided by Islamic principles, exhibit strong interfaith relations. These include viewing individuals from other faiths as fellow human beings, engaging in respectful and meaningful dialogue, forming friendships with peers of other faiths, attending lectures together, playing sports jointly, inviting them home during holidays, assisting during difficulties, and participating in their joyous and sorrowful occasions. These actions indicate sustained interfaith relationships. However, it was observed that students of other religions studying at these universities had limited opportunities to independently learn about and understand the ethical teachings, values, moral*

*principles, and belief-based aspects presented in Islamic sources such as the Qur'an and Sunnah. Consequently, this study offers recommendations and guidelines to expand such initiatives.*

***Key words:*** *Multicultural environment, interfaith dialogues, Islamic perspective, Muslim students.*

**அறிமுகம்**

இன்றைய நவீன உலகில் அதீத மதப்பற்று, இனப்பற்று மற்றும் சமயங்களுக்கிடையிலான காழ்ப்புணர்வு என்பனவற்றினால் சமூகத்தில் வன்முறைகள், மோதல்கள் அதிகரித்து வருகின்றன (Sheefa et al, 2021). இதனால் சில நாடுகள் அழிவுப்பாதையை நோக்கி செல்வதுடன் சமூக அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் பெரும் அச்சுறுத்தலாகவும் மாறியுமுள்ளன. எனவே, மோதல் என்ற நிலையை இல்லாமல் செய்து உரையாடலுக்கான அவசியம் பலராலும் தேசிய மட்டங்களிலும் சர்வதேச மட்டத்திலும் வலியுறுத்தப்படுகின்றன (Boubakri, 2022). சமயக் கலந்துரையாடல் தொடர்பாக பலரும் பல வகையான வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். குறிப்பாக வேறுபட்ட சமய நம்பிக்கைகளைக் கொண்டவர்களுக்கிடையில் இடம்பெறக்கூடிய அனைத்து உரையாடல்களும் சமயக் கலந்துரையாடலாகும் (Rofiqi & Haq, 2022). அது தனிநபர்களுக்கிடையில் அல்லது குழுக்களுக்கிடையில் இடம்பெறுவதுடன் வாய்மொழி மூலமாகவும் எழுத்து வடிவிலும் இருக்க முடியும் (Raza& Khalid, 2022). சிலர் மதங்களை பின்பற்றக்கூடியவர்களுக்கிடையில் சிந்தனைகள், யதார்த்தங்கள், தகவல்கள் மற்றும் அனுபவங்கள் ஆகியவற்றைப் பரிமாறிக்கொள்வதாகும் (Okawa, 2021). மேலும், ஒரு தரப்பினர் மற்ற தரப்பினரை ஒன்றில் அவர்களுடன் உடன்பாடான விடயங்களை அல்லது முரண்பாடான விடயங்களை அறிந்துகொள்வதன் மூலம் பிறரை முழுமையாகப் புரிந்துகொள்ளும் ஒரு வழியாகும் (Tahir et al, 2023). பிறரின் நம்பிக்கைக் கோட்பாடுகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிவதுடன் சந்தேகப்படுதல், குற்றச்சாட்டுகளை முன்வைத்தல் போன்றவைகள் நீங்கி அன்பு, பரஸ்பர உதவி, மனிதாபிமான செயற்பாடுகள் மற்றும் பொது நலன்களில் ஒருமித்துச் செயற்படுதல் போன்றன இதன் விளைவுகளாகும் (Wagay, 2022). விவாதங்கள் மத்திய காலத்திலும் நவீன காலத்திலும் சமாதானம், பாதுகாப்பு, பொருளியல், அரசியல் மற்றும் பண்பாட்டு ரீதியாக அழிவுகளை ஏற்படுத்தி இருக்கின்றன.

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கை போன்ற பல்கலாசார மற்றும் சமய பன்முகத்தன்மை கொண்ட நாட்டில், பரஸ்பர புரிதல், சகிப்புத்தன்மை மற்றும் சமூக ஒற்றுமையை வளர்ப்பதில் சமயங்களுக்கிடையிலான உரையாடல் முக்கிய பங்கு வகிக்கின்றன. இஸ்லாமியக் கோட்பாடுகளும் இத்தகைய இலக்குகளை அடைவதைப் பெரிதும் வலியுறுத்தியுள்ளன. எவ்வாறாயினும், சமூகத்தின் உயர்கல்வி நிறுவனங்களான அரச பல்கலைக்கழகங்களில் இத்தகைய உரையாடலை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் எவ்வாறு உள்ளன என்பதைப் புரிந்துகொள்வதில் இடைவெளி காணப்படுகின்றது. இத்தகைய இடைவெளியானது பன்முக கலாசார சூழலில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான சாத்தியம் பற்றிய கேள்விகளைத் தோற்றுவித்துள்ளன.

**ஆய்வின் நோக்கங்கள்**

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களைக் கொண்டுள்ளது:

1. பல்லின சமூகச் சூழலில் சமயங்களுக்கிடையிலான கலந்துரையாடலின் அவசியம் பற்றிய இஸ்லாமிய வழிகாட்டல்களை முன்வைத்தல்.
2. இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் இவ்விடயம்சார் செயற்பாட்டு நிலையை மதிப்பிடுதல்.

**இலக்கிய மீளாய்வு**

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தலைப்புடன் தொடர்பான இலக்கிய மீளாய்வின் போது சமயக் கலந்துரையாடல் தொடர்பில் அதிகளவான ஆய்வுகள் இடம்பெற்றிருப்பது ஆய்வாளர்களினால் அறிய முடியுமாக இருந்தது. அதனடிப்படையில், அவற்றில் சில பின்வருமாறு,

Al-Khudairi, F. (2018) என்பவரினால் மேற்கொள்ளப்பட்ட "சகாபதுல் ஹிவாரி பில் இஸ்லாம்" (இஸ்லாத்தில் உரையாடல் நாகரிகம்) எனும் ஆய்வானது உரையாடலுக்கான வரைவிலக்கணங்களை அடையாளப்படுத்துதல், பல்வேறுபட்ட சமூகக் கட்டமைப்பில் பிறருடனான உறவாடலின் அடிப்படை விதிகளை அடையாளப்படுத்துதல், உரையாடலுக்கான இலக்குகளைத் தெளிவுபடுத்துதல், அல்–குர்ஆன் மற்றும் அல்–ஹதீஸில் அதற்கான ஆதாரங்களைத் தெளிவுபடுத்துதல், நடுநிலையான கண்ணோட்டத்தில் அழகிய உரையாடலை மேற்கொள்வதற்கான இஸ்லாமிய வழிகாட்டுதல்களை அடையாளப்படுத்துதல் போன்றவற்றைக் கண்டறிவதை நோக்கங்களாகக் கொண்டிருந்தன. அல்–குர்ஆனிய உரையாடல் என்பது பல்வேறுபட்ட சமயங்களைப் பின்பற்றக்கூடியவர்களுடன் தெளிவான ஆதாரங்களை முன்வைத்து அழைப்பு விடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. இஸ்லாம் உரையாடலுக்கான மார்க்கம் எனும் அடிப்படையில் அது மற்றவர்களின் பகுத்தறிவு நிலைகளுக்கு ஏற்ப உரையாட வேண்டும் எனவும் குறிப்பாக அரசியல், சமூகவியல், ஆன்மீகம், சிந்தனை போன்றவைகளில் காணப்படுகின்ற வேறுபாடுகளுக்கப்பால் சமாதானமான சகவாழ்வை நோக்கமாகக் கொண்டு அமைய வேண்டும் என்பன ஆய்வின் முடிவுகளாகக் கண்டறியப்பட்டுள்ளன.

Imad, A. K. (2014) என்பவரினால் மேற்கொள்ளப்பட்ட "அன்வாஉல் ஹிவாரித் தஅவிய்யீ வ அவ்லவியாதுஹா/ பில் குர்ஆனில் கரீம்: (அழைப்பு ரீதியான உரையாடலின் வகைகளும் அது தொடர்பான அல்குர்ஆனின் முன்னுரிமையும்) எனும் ஆய்வில் உரையாடலின் முக்கியத்துவம், உரையாடலுக்கான சட்டவாக்கம், அல்–குர்ஆனில் காணப்படும் உரையாடலுக்கான வழிகாட்டல்கள், நபியவர்கள் மேற்கொண்ட சமூக உரையாடல் போன்றவற்றைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அழைப்பு ரீதியான உரையாடல் என்பது மனிதநேயம் மேம்படுவதற்கான வழிகளில் ஒன்றாக காணப்படுகின்றது. அல்–குர்ஆனில் பிறருடனான உறவாடலின் போது ஓர் இஸ்லாமிய அழைப்பாளர் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைத் தகைமையாக உரையாடலுக்கான குறித்த தலைப்புத் தொடர்பான போதிய அனுபவம் மற்றும் விழிப்புணர்வு பெற்றிருப்பதை குறிப்பிட்டுள்ளதாக அதனது முடிவில் கண்டறியப்பட்டுள்ளது.

Muthaliff, M.M.A. (2020). என்பவரினால் மேற்கொள்ளப்பட்ட "மப்ஹூமுல் ஹிவாரித் தீனிய்யி வ அஹ்காமுஹு/ பிஷ் ஷரீஅதில் இஸ்லாமிய்யஹ்" (சமயக் கலந்துரையாடலும் இஸ்லாமிய சட்டவியலில் அதன் விதிமுறைகளும்) எனும் தொகுத்தறி முறையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் நோக்கங்களாக சமயக் கலந்துரையாடலை வரையறை செய்தல் மற்றும் இஸ்லாமிய ஷரீஆவில் அதன் சட்டங்களைக் கண்டறிதல் போன்றன காணப்படுகின்றன. சமயக் கலந்துரையாடல் என்பது அல்லாஹ்வின் பக்கம் அழைப்பு விடுப்பதும், இஸ்லாமிய இலக்குகளை நோக்கி அழைப்பு விடுப்பதுமாகும் எனக்குறிப்பிடும் இவ்வாய்வானது உரையாடலுக்கான அடிப்படைகள், முறைமைகள் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் பேசுகின்றது.

Boubakri, M. (2022) என்பவரினால் மேற்கொள்ளப்பட்ட "அல் ஹிவாருத் தீனிய்யு இன்த முஹம்மத் அத் தாலிபீ வ அசாஸ/த் தஆயுஷ பைனல் அத்யானி" (சமயக் கலந்துரையாடல் தொடர்பான முஹம்மத் அத்தாலிபி அவர்களின் நிலைப்பாடும் சமயங்களுக்கிடையிலான சகவாழ்வின் அடிப்படைகளும்) எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் நோக்கமாக சமயக் கலந்துரையாடலின் ஊடாக சமயங்களுக்கிடையில் சமாதானம் மற்றும் சகவாழ்வை ஏற்படுத்துவதற்கான விடயங்களைக் கண்டறிதல் காணப்படுகின்றது. உரையாடல் என்பது இரு தரப்பினரும் நாகரிகமான முறையில் மறு தரப்பினர் சொல்லக்கூடிய விடயத்தை செவிசாய்த்துக் கேட்பதும் மறு தரப்பினர் தனது கருத்தை வெளிப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதுமாகும். மேலும். உரையாடல் என்பது வாதாட்டம், குறைகாணுதல், பிறருடைய நம்பிக்கைசார் விடயங்களில் குறைகாணுதல் போன்ற விடயங்களை உள்ளடக்காத வகையில் அமையப் பெற்றிருக்க வேண்டும். எனவே, உரையாடலின் அடிப்படை இலக்காக பிறரை அறிந்து கொள்ளல், கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் அனுபவங்களை பரிமாறிக்கொள்ளல், சமாதானத்தை நிலைநாட்டுதல் போன்றவைகளைக் கொண்டிருக்க வேண்டும் என முடிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Kahouni, I. A. A. (2020) என்பவரினால் மேற்கொள்ளப்பட்ட "அல் ஹிவாரு பில் குர்ஆனி வஸ்ஸ/ன்னதி வ மௌகிபுல் இஸ்லாமி மின் கைரில் முஸ்லிமீன்" (அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸ/ன்னாவின் பார்வையில் உரையாடல்: முஸ்லிமல்லாதவர்கள் தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாடு) எனும் இவ்வாய்வில் உரையாடல் என்பது மனித வாழ்க்கையில் அனைத்து துறைகளிலும் இருக்க வேண்டிய அதேவேளை அது முஸ்லிம்களுடனும், முஸ்லிமல்லாதவர்களுடனும் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே, சமாதானமான, சகவாழ்வுக்கான அடிப்படையாக உரையாடல் காணப்படுகிறது. உரையாடல் மேற்கொள்ளப்படுகின்ற போது விட்டுக்கொடுப்புடனும், அழகிய முறையிலும் நடந்து கொள்ள வேண்டும் என்பன சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. எனவே, இஸ்லாமிய உரையாடலுக்கான ஒழுக்கவியலில் பிறருடன் அமைதியான முறையில் எவ்வித வற்புறுத்தலுமின்றி பலமானவர் பலவீனமானவர் மீதும் செல்வந்தர் ஏழையின் மீதும் ஆதிக்கம் செலுத்தாமல் சமத்துவத்தைப் பேணி உரையாட வேண்டும். மேலும், உடன்பாடான விடயங்களில் ஒருவருக்கொருவர் பரஸ்பர உதவியாகவும் முரண்பாடான விடயங்களில் விட்டுக்கொடுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு அடிப்படையை குறிப்பிட்டிருக்கின்றது.

Amjad, Q. (2014) என்பவரினால் மேற்கொள்ளப்பட்ட "அசரு அலாகதி ஹரகதி தப்ஸீரில் கர்பிய்யி பில் இஸ்தி:மாரி வல் இஸ்திஷ்ராகி அலா தஅவாதில் ஹிவாரி பைனல் இஸ்லாமி வல்

மஸீஹிய்யதில் கர்பிய்யதி" (மேற்கத்தேயம் மற்றும் உலகமயமாக்கலில் கிறிஸ்தவ அழைப்புக்கான அமைப்பின் விளைவுகள்: இஸ்லாம் மற்றும் மேற்கு கிறிஸ்தவ மதங்களுக்கிடையிலான உரையாடல்) என்ற ஆய்வு பகுப்பாய்வு முறையில் அமையப்பெற்றுள்ளது. கிறிஸ்தவர்களுடனான உரையாடலுக்கான அடிப்படைகளை அடையாளப்படுத்துதல், கிறிஸ்தவர்களுடன் பேணிக்கொள்ள வேண்டிய அடிப்படைகள் தொடர்பான அல்குர்ஆனிய உரையாடல்களைக் கண்டறிவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஏனைய சமயத்தவர்களை வழிநடாத்துவதாக இருந்தால் ஏகத்துவம் பற்றிய முழுமையான விழிப்புணர்வு பெற்றிருக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான சமய ரீதியான உறவைக் கட்டியெழுப்புவதற்கும் பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படுவதற்கும் வழியாக அமையும். மேலும், பல்வேறு சமயங்களைப் பின்பற்றக்கூடியவர்களுக்கு மத்தியில் உரையாடலை மேற்கொள்வதற்கு அல்குர்ஆன் மற்றும் பகுத்தறிவுடைய வழிகாட்டல்கள் இன்றியமையாததாகும். முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் தங்களுடைய சமயங்களைப் பரஸ்பரமாக சரியாகவும் தெளிவாகவும் விளங்கிக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. இது சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய, மனித மேன்மையைப் பாதுகாக்கக்கூடிய சமூகமொன்றை உருவாகுவதற்கான வழியாகும்.

Morrison, C. (2020) என்பவரினால் மேற்கொள்ளப்பட்ட Post-conflict interfaith activities, combatting religious extremism and mass atrocity in Sri Lanka எனும் ஆய்வானது 2019 ஈஸ்டர் குண்டுவெடிப்பு தொடர்பாக இலங்கையின் மோதலை வரலாற்று அடிப்படையில் கண்டறிவதனை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் மதங்களுக்கிடையிலான தீவிரத்தன்மை காணப்படுவதாகவும் இன, மதக் குழுக்களுக்கிடையில் நீண்டகால பிளவுகள் மற்றும் அவநம்பிக்கைகள் எவ்வாறு அதிகரித்தது என்பது பற்றியும் பேசுகின்றது. மேலும், 2009 பின்னர் அனைத்துத் தரப்பினரும் இனங்களுக்கிடையிலான பரஸ்பர உறவை வளர்ப்பதற்கான கருத்துக்களும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

Paul Rohan, J. C. (2021) என்பவரினால் மேற்கொள்ளப்பட்ட Challenges and Opportunities for Co-Existence: A Sri Lankan Christian Perspective எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில் கடவுளின் இருப்பானது பல மதங்களின் தோற்றத்திற்கு வழிவகுத்துள்ளது. அது அனைத்து மனிதர்களையும் இணைக்கும் ஒரு இணைப்பாக இருக்க வேண்டும். ஆனால், உலக வரலாற்றில் மதங்கள், மோதல்கள், வன்முறை, அநீதி, பாகுபாடு மற்றும் வாழ்க்கைக்கு எதிரான நடைமுறைகள் போன்றவற்றைத் தோற்றுவித்துள்ளன. இலங்கையைப் பொறுத்தவரையில் சமயக் கலந்துரையாடல் மற்றும் இணக்கமான சகவாழ்வு மூலம் நான்கு சமயங்களையும் பின்பற்றும் மக்களுக்கிடையில் சகவாழ்வை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

Ramli, A. F., Ashath, M., & Moghri, A. (2023) என்பவர்களினால் மேற்கொள்ளப்பட்ட A comparative study on the notion of dialogue in Islam and Buddhism எனும் இவ்வாய்வானது சமயக் கலந்துரையாடல் தொடர்பான இஸ்லாமிய மற்றும் பௌத்த கண்ணோட்டங்களினை ஒப்பீட்டு ரீதியாக மேற்கொண்டுள்ளது. இதில் இஸ்லாம் தௌஹீதை அடிப்படையாக் கொண்ட அழைப்புப் பணியையும் பௌத்தம் மனித துன்பங்களிலிருந்து விடுபடுவதனை ஊக்குவிக்கும் வகையிலும் அமைந்திருப்பதாகவும் சமூக நல்லிணக்கம், அமைதி மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றை நிலைநிறுத்த மதங்களுக்கிடையிலான

உறவுகளின் சாத்தியக்கூறுகள் பற்றியும் சுட்டிக்காட்டியுள்ளது.

**ஆய்வின் இடைவெளி**

இலங்கையில் பௌத்த, முஸ்லிம், தமிழ் இனமுரண்பாடு தொடர்பாக பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற போதிலும் சமயக் கலந்துரையாடல் தொடர்பான ஆய்வுகள் மிகக்குறைவாக இடம்பெற்றுள்ளமை ஆய்வாளர்களினால் கண்டறியப்பட்டுள்ளது. அதிலும் பிரதானமாக, இலங்கையில் அரச பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்கள் தமது சமயம் வலியுறுத்தும் சமயக்கலந்துரையாடல் தொடர்பான வழிகாட்டல்களை பிற சமய மாணவர்கள் புரிந்து கொள்வதற்காக எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள், அதற்கான வாய்ப்புக்கள் எவ்வாறு உள்ளன என்பது பற்றிய பெறுபேறுகளை எந்த ஆய்வுகளும் வெளிப்படுத்தவில்லை.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் தரவு மூலங்களைப் பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதனிலைத் தரவுகள் இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் 308 மாணவர்களிடம் இருந்து வினாக்கொத்து (Questionnaire) நேர்காணல் (Interview) மூலமும், இரண்டாம் நிலைத்தரவுகள் நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தள, பத்திரிகை ஆக்கங்கள் மூலமும் பெறப்பட்டுள்ளன. வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகள் MS Excel மென்பொருளின் துணையுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**பெறுபேறுகளும் கண்டறிதல்களும்**

**சமயக் கலந்துரையாடல் (Interfaith dialogue)**

சமகாலத்தில் அதிக முக்கியத்துவம் கொடுத்து பேசக்கூடிய தலைப்புக்களில் ஒன்றாக சமயக் கலந்துரையாடல் காணப்படுகின்றது. "பிறருடைய நம்பிக்கை கோட்பாடுகளை முழு கண்ணியத்துடனும் அழகிய முறையிலும் புரிந்து கொள்ளல் வேண்டும். சந்தேகப்படுதல், குற்றச்சாட்டுக்களை முன்வைத்தல் போன்றன அன்றி அன்பு, பரஸ்பர உதவி, மனித பொது நலன்சார் செயற்பாடுகளில் ஒருமித்துச் செயற்படுதல் போன்றவை இதன் விளைவாக ஏற்படுகின்றன" (Ismail & Uyuni, 2020). சமயக் கலந்துரையாடல் என்பது வேறுபட்ட சமய நம்பிக்கைகளை பின்பற்றக்கூடியவர்களுக்கிடையில் இடம்பெறக்கூடிய அனைத்து உரையாடல்களுமாகும். அது தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கிடையில் நேருக்கு நேர் வாய்மொழி அல்லது எழுத்து வடிவில், தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் இடம்பெறுகின்றன (Fatmir, 2008). இஸ்லாமிய கோட்பாடுகள், சட்டவியல்கள், ஒழுக்கவியல்கள் போன்றவற்றை தெளிவுபடுத்துவதனை நோக்காகக் கொண்டு அருளப்பட்ட வேதங்கள், மனித சிந்தனையால் உருவாக்கப்பட்ட சமயங்கள் ஆகியவைகளை பின்பற்றக் கூடியவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலும் மேற்கொள்ளப்படும் (Deena, 2017).

இதனுடைய நோக்கங்களாக, பரஸ்பர பயன்பெறுதல், பிறரது சமயங்களைப் பற்றிய விழிப்புணர்வு பெற்றுக்கொள்ளல், அறிந்துகொண்டுள்ள விடயங்கள் தொடர்பாக மேலதிக தெளிவுகளையும் விளக்கத்தையும்

பெற்றுக்கொள்ளுதல் போன்றன காணப்படுகின்றன. இது ஒன்றுபட்ட சமயங்களுக்கிடையில் இடம்பெறக்கூடிய தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கிடையில் கொள்கை சார்ந்த உரையாடல் என்பது மேலதிகமான தகவல்களை பெற்றுக்கொள்வதாகவும் தனிநபருடைய சுதந்திரத்தை பேணிப்பாதுகாப்பதாகவும் அமைய வேண்டும் (Akhter et al, 2023). நபிமார்களுக்கும் அவர்களுடைய சமூகங்களுக்கும் இடையிலான ஓர் உரையாடலாகவும் இது காணப்படுகின்றது. அவர்கள் பல்வேறுபட்ட வழிமுறைகளில் பல முறைமைகளில் உரையாடியிருக்கிறார்கள். அல்குர்ஆனிலுள்ள சமயக்கலந்துரையாடலின் பிரதான வசனமாகிய (03:64) சிலர் நினைப்பது போன்று, வேதவாசிகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு விடயமல்ல. மாறாக, அது வேதவாசிகள் என வெளிப்படையாகக் கூறியிருந்தாலும் அனைத்து மனிதர்களையும் உள்ளடக்கிய ஒரு வசனமாகும். இங்கு "ஸவா" (sava) என்பது ஏகத்துவத்தின் மீதான சாட்சியாகவே கொள்ளப்படுகிறது (இப்னு கஸீர், 759).

முஃமின்களிலும் ஏனைய சமயத்தைச் சார்ந்தவர்களிலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கிடையில் இடம்பெறும் ஒரு பேச்சுவார்த்தை "ஹிவார்" ஆகும். இது நேருக்கு நேர் பேசக்கூடிய அனைத்து விடயங்களையும் உள்ளடக்கும் (Akhter et al,2023). சமயக் கலந்துரையாடல் என்பது சமயத்தைப் பின்பற்றக்கூடியவர்களுக்கு மத்தியில் ஏற்படக்கூடிய உரையாடல், பேச்சுவார்த்தை, விவாதம், முரண்பாடு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கும். எனினும், இரண்டு அல்லது அதை விட அதிகமானவர்கள் யதார்த்தமான உண்மைத் தன்மையை அறிந்து கொண்டு வன்முறை, வீண்வாதாட்டங்களை தவிர்க்கும் நோக்கில் மேற்கொள்ளக்கூடிய ஒரு தொடர்பாடல் நடவடிக்கையாகும் (Abbas, 2023). சமயங்களுக்கிடையில் பொதுவான விடயங்களாக காணப்படக்கூடியவைகளை முழுமையாகக் கற்பதன் மூலமாகவே இதனை நடைமுறைப்படுத்த முடியும். அது பிராந்திய, தேசிய, சர்வதேச ரீதியாக இருக்க முடியும். அது அரசியல், சமூகவியல், பொருளியல் மற்றும் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான கருப்பொருள்களையும் உள்ளடக்கியிருக்கின்றது. உதாரணமாக, சிறுபான்மையினருக்கான சட்டங்கள், மனித உரிமைச் சட்டங்கள், சர்வதேச பாதுகாப்பு மற்றும் இதர விடயங்கள் என்பதை அடையாளப்படுத்திக் கூறலாம் (Ismail & Uyuni, 2020).

யூதர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் தங்களது மார்க்கத்தைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கமற்றவர்களாக உள்ளனர். அவர்களது நம்பிக்கையின் பிரகாரம் யூதம் என்பது ஓர் உன்னதமான இரத்தமாகும். அது யூத பரம்பரையில் வருபவர்களுக்கேயன்றி வேறு யாருக்கும் உடைமையாகாது. "ஏனெனில், தாங்கள் அல்லாஹ்வினால் தெரிவு செய்யப்பட்ட மக்கள்" என்ற வசனம் அதற்கான ஆதாரமாக் காணப்படுகின்றது (Fatmir, 2008). கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரை சமயக் கலந்துரையாடல் என்பது ஆரம்ப காலத்தில் இஸ்லாத்திற்கு எதிரான பகைமை உணர்வை வெளிப்படையாக் கொண்டிருந்த பொழுதிலும் சமாதானமான சமயக் கலந்துரையாடலுக்கான ஆரம்பம் 1955 முதல் 1965 வரையான இடைப்பட்ட காலப்பகுதியில் ஆறாம் பவுல் என்பவரினால் "கிறிஸ்தவமல்லாத ஏனைய சமயத்தவர்களுடனான தேவாலயத்தின் உறவு" எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட ஓர் உறுதி மொழியிலேயே குறிப்பிடப்பட்டிருக்கின்றது (Akhter et al, 2023). அதில் பாப்பரசர், சபையில் அனைவரும் கடந்த காலங்களில் நடந்த விடயத்தை மறந்து விடுமாறும் மாற்று மதத்தவர்களுடன் நடுநிலைமையாகவும் புரிந்துணர்வுடனும் நடந்து கொள்ளுமாறும் சமூக நீதி, நலவுகள், பண்பாடுகள், மற்றும் சமாதானம் ஆகியவற்றை அனைத்து மனிதர்களுக்கும் பொதுவாக வழங்குமாறும் தூண்டினார் (Ismail & Uyuni, 2020). கிறிஸ்தவர்களில் கல்விமான்களாக இருந்த சிலர் அதிலும் குறிப்பாக, லூயிஸ் மெசிங்டொன் 1883 – 1962 என்பவர் முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர்

மூன்றாம் உலக நாடுகளுக்கிடையில் இஸ்லாத்தைப் பற்றிய சமயக் கலந்துரையாடலைத் தோற்றுவிப்பதன் மூலமாகவே பரஸ்பர உதவியையும் சமாதானத்தையும் கட்டியெழுப்ப முடியும் என்று கருதினார். இதற்காக முஸ்லிம்கள் பலரைச் சந்தித்து அதற்கான கலந்துரையாடலை மேற்கொண்டார். அப்பொழுதிருந்த முஹம்மத் அத்தாலிபி என்பவர் இந்த சமயக் கலந்துரையாடல் தொடர்பான இஸ்லாமிய சிந்தனையைப் புதுப்பித்து 1995ம் ஆண்டிற்கான சமாதான ஹிரோசிமா நோபல் பரிசையும் அதேபோன்று 1977ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜியோவானி என்ஜலி (Giovani Angelli) பட்டத்தையும் பெற்றுக்கொண்டார் (Deena, 2017).

அல்குர்ஆன் பல இடங்களில் சமயக் கலந்துரையாடலை தூண்டுகிறது. குறிப்பாக, வேதவாசிகளுடனான சமயக் கலந்துரையாடலைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. எனவே, இஸ்லாம் முன்னைய நபிமார்களுக்கு அனுப்பப்பட்ட ஏகத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அனைத்து சமயத்தவர்களுடனும் தெளிவான முறையில் புரிந்துணர்வுடன் சமயக் கலந்துரையாடலை மேற்கொள்ளுமாறு கூறுகிறது (Ramzy & Qolam, 2019). ஆரம்ப காலத்தில் காணப்பட்ட இஸ்லாமிய சிந்தனையின் விளைவுகள் சமயங்களுடனான உரையாடலுக்கு வழிவகுப்பதாகக் காணப்படவில்லை. மாறாக, அவை சமயங்களுக்கிடையிலான விவாதங்களாகவே இருந்தன. அவர்கள் தங்களுடைய வாதாட்டங்களை சரி காணுவதற்காகவும் பிற சமய வேதங்களில் குறைகாணும் முகமாகவும் குறிப்பாக வேதவாசிகளுடைய வேதங்களில் குறைகாணுவதையுமே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக, ஏகத்துவம் சார்ந்த விடயங்களில் அவர்களுடைய கவனம் இருந்தது (Nawaz et al, 2022). எனவே, அனைவருக்கும் நலவை நாடுதல் என்பது உரையாடலின் மூலமாகவேயன்றி சாத்தியமாகாது (Abbas, 2023).

பாடசாலைககளில் மதங்களுக்கு இடையிலான உரையாடல் என்பது கல்வியியல் மற்றும் குடியுரிமை ஆகிய விடயங்களில் தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது (Abdool, Potgieter, Walter & Wolhuter, 2007). தென்னாப்பிரிக்காவில் உள்ள சமூகங்கள் மற்றும் பாடசாலைகளில் ஏற்படுகின்ற சமூக மோதல்கள் தொடர்பான ஆய்வின் போது இவை மத ரீதியாக தூண்டப்படுகின்றவை என ஆசிரியர்கள் வாதிடுகின்றனர். இதன் காரணமாக பன்மைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைதியான முறையில் இயங்கும் பாடசாலைகளுக்குள் அவர்கள் தமது பணியை மட்டுப்படுத்திக் கொள்கின்றனர். அங்கு மாணவர்களிடம் மதங்களுக்கு இடையேயான உரையாடலைப் பற்றிய திறந்த மனப்பான்மையை வளர்ப்பதன் மூலம் சமாளிக்க முடியும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர் (அப்துல், 2007).

**நிபந்தனைகளும் இலக்குகளும்**

இதன் நிபந்தனைகளாக இரு விடயங்கள் காணப்படுகின்றன (Ramzy & Qolam, 2019).

1. நவீன காலத்தில் பிறர் எந்தச் சிந்தனை, சமயக் கோட்பாட்டிற்கு அமைவாகவிருந்தாலும் அவர்களுடன் திறந்த மனதோடு பழக வேண்டும். மனித பெறுமானங்கள் தொடர்பாக எழுந்திருக்கக்கூடிய முரண்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்கள் ஆகியவற்றை சகிப்புத் தன்மையுடனும் தனிமனித கண்ணியத்தை உறுதிப்படுத்தும் வகையிலும் அமையப் பெற்றிருக்க வேண்டும் (Nawaz et al, 2022).

2. முரண்பட்ட சமயங்களை பின்பற்றக்கூடியவர்களுக்கிடையில் நாகரிகமான முறையில் உரையாடலை மேற்கொள்ளல். இது இறைவன் தொடர்பான விடயங்களில் மாத்திரமல்லாமல் ஏனைய

விடயங்களிலும் காணப்பட வேண்டும் (Fatmir, 2008).

வாதாட்டங்கள், விவாதங்கள் நவீன காலத்திலும் மத்திய காலத்திலும் சிந்தனை, பொருளாதாரம் மற்றும் பண்பாட்டு ரீதியாக அழிவுகளையே ஏற்படுத்தி இருக்கிறன. எனவே, இவ்விடயத்தில் வீண்வாதாட்டத்தை முழுமையாக களைந்தெறிவதில் கவனமாக இருக்க வேண்டும் (Okawa, 2021).

**சமயக் கலந்துரையாடலின் இலக்குகள்**

"இஸ்லாமும் உரையாடலும்" எனும் புத்தகத்தில் தாலிபி அவர்கள் ஒரு மு.ஃமின் தனது நம்பிக்கைசார் விடயங்களில் முழுமையடைந்து பிறரை அறிந்து கொண்டு சிந்தனைகளையும் அனுபவங்களையும் பரிமாறி, பிரபஞ்சம் சார்ந்த வினாக்களுக்கு விடை தேடி, பூமியில் சமாதானத்தைப் பரப்பி பிறரை மதமாற்றத்திற்கு உட்படுத்துவதனை நோக்காகக் கொண்டிராத ஒரு செயற்பாடே உரையாடலாகும். இதன் இலக்குகளாக, பிறரை ஏற்றுக்கொள்ளுதல், கண்ணியப்படுத்தல், மக்கள் மற்றும் நாடுகளுக்கு இடையிலான உறவுகள், சிந்தனை ரீதியான பன்மைத்துவம் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளல் ஆகியன காணப்படுகின்றன (Ismail & Uyuni, 2020).

மேலும், உரையாடலுக்கான அடிப்படைகள் மார்க்கத்தினுடைய மூலாதாரங்களிலிருந்து பெறப்பட வேண்டும் என நிறுவுகிறார். அல்குர்ஆன் சமயக் கலந்துரையாடல் என்பது மக்களை அழைப்பு விடுத்து, வன்முறையை களைந்தெறிந்து, மாற்றுக்கருத்துக் கொண்டோரை கண்ணியப்படுத்த வேண்டும் என அடையாளப்படுத்துகின்றது. இதனால் அல்குர்ஆனின் பார்வையில் பிறருடன் வார்த்தையிலும் செயலிலும் சகிப்புத்தன்மையுடனும் மென்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்றும் சமயத்தைப் பின்பற்றாத நாஸ்திகர்களுடன்கூட அழகிய முறையில் நடந்து கொள்ளல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, சமயக்கலந்துரையாடலை மேற்கொள்வது ஒரு முஸ்லிமின் மீதான குர்ஆனிய வழிமுறையாகும் (அல்குர்ஆன்: 02:62, 29:46). சமயக் கலந்துரையாடலின் இரண்டாவது மூலாதாரமாக அஸ்–ஸு/ன்னா காணப்படுகிறது. குறிப்பாக, நபியவர்களுடைய வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வுகள் மற்றும் மதீனாவில் வேதவாசிகளான சமூகங்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட பரஸ்பர உடன்படிக்கைகள் போன்றன காணப்படுகின்றன.

எனவே, சமயக்கலந்துரையாடலின் மிக முக்கியமான நிபந்தனைகளில் ஒன்று மத மாற்றம் செய்யாமையாகும். ஏனெனில், சிலர் சமயக்கலந்துரையாடலின் மூலமாக மத மாற்றத்தை விரும்புகின்றனர். சிலபொழுது முஸ்லிம்களும் பொதுவாக கிறிஸ்தவர்களும் ஒரு வகையில் இதனைச் செய்கின்றனர். முஸ்லிம்கள் த.ஃவா (Dawah) எனும் பெயரிலும் கிறிஸ்தவர்கள் தப்ஸீர் (Thabsheer) எனும் பெயரிலும் இதனை மேற்கொள்கின்றனர். இது சமய நம்பிக்கை கொண்டவர்களுக்கும் சமய நம்பிக்கையற்றவர்களுக்குமிடையில் பாரியதொரு சந்தேகத்தை ஏற்படுத்துகின்ற விடயமாக காணப்படுகிறது. எனவே, மத மாற்றுதல் செயற்பாடு என்பது பிறரை அவமானப்படுத்தும் ஒரு செயலாகவும் கருதப்படுகிறது (Okawa, 2021). அதற்காக த.ஃவா செய்வது சமயச்சுதந்திரத்திற்கு முரணான அல்லது தூதுத்துவத்தை எத்திவைப்பதற்குத் தடையாக அமையாது. ஏனெனில், இஸ்லாம் சர்வதேச மார்க்கம் என்ற அடிப்படையில் தேவை கருதி அதனுடைய அகீதாவைப் பாதுகாக்கும் முகமாக மக்களுக்கு மத்தியில் த.ஃவா செய்யும் நோக்கில் மனிதர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது. அவர்கள் ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும்

அவர்களுடைய சமயத் தெரிவுச்சுதந்திரத்தில் விடப்படுகிறது (Rofiqi & Haq 2022).

மேலும், சமயக் கலந்துரையாடலின் பொழுது முக்கியமான மூன்று விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் (Tahir et al, 2023). 1. இறை நிராகரிப்பாளர்களுக்கிடையில் உபகாரம், அழகிய வாழ்வு, சகிப்புத்தன்மை போன்றவற்றை பேணிக்கொள்ளல். 2. அனைவருடனும் நீதியை நிலைநாட்டி, சமத்துவமாக நடந்துகொள்ளல். 3. சந்தர்ப்பம், இடம் மற்றும் சூழல்களுக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளல்.

**அல்குர்ஆனில் உரையாடல்கள்**

அல்குர்ஆன் மனிதர்களுக்கிடையிலான உறவைப் பொதுவான கண்ணோட்டத்தில் நோக்கி அழகிய முறையில் உரையாட வேண்டும் என அவ்வுறவை அமைத்திருக்கிறது. முஸ்லிம்களின் உள்ளக சமூகக் கட்டமைப்பில் அரசியல் ரீதியாகவும் ஏனைய விடயங்களிலும் இந்த உரையாடல் நிகழ்த்தப்பட வேண்டும். இது இஸ்லாமிய சட்ட விடயங்களைத் தெளிவுபடுத்துகின்ற மத்ஹபுகளுக்கிடையிலான (Mazhab) உரையாடல் மட்டுமல்லாமல் ஒரு சமூகத்தில் தத்துவார்த்த அடிப்படையில் ஆரம்பத்திலிருந்தே கட்டியெழுப்பப்பட வேண்டும். ஒரே சமூகத்தில் இருக்கக்கூடிய இரு தனி நபர்களுக்கிடையிலிருந்து இந்த உரையாடல் ஆரம்பிக்கப்பட்டு, சமூகக் கட்டமைப்பில் கலாசார, உணர்வு ரீதியான விடயங்கள் போன்றவற்றில் ஒருவர் மற்றவருடன் மேற்கொள்ள வேண்டிய உறவின் அடிப்படையாக உரையாடல் காணப்படுகின்றது (Ramzy&Qolam, 2019).

ஆதம் (அலை) அவர்களுக்கு இப்லீஸ் ஸுஜூது செய்ய மறுத்து இறை கட்டளைக்கு மாறுசெய்த நிலையிலும் அல்லாஹ் இப்லீஸுடனான உரையாடலை மறுக்கவில்லை. மாறாக, இப்லீஸ் தனது விடயங்களை இறைவனிடத்தில் முன்னிறுத்தி உரையாடலுக்கான அனுமதியை வேண்டிக்கொண்டான். இறைவனும் அவனுடனான உரையாடலை ஏற்றுக்கொண்டதற்கிணங்க தொடர்ந்து இப்லீஸ் தனது திட்டங்களையும் முன்வைத்தான் (Abbas, 2023). எனவே, நிராகரிக்கப்பட்ட ஒரு மனிதருடன் உரையாடலைத் தவிர்த்துக்கொள்வதற்கு இஸ்லாத்தில் எவ்வழியும் கிடையாது. ஒரு மனிதன் சமய, சமூக விடயங்களில் தாழ்ந்தவனாக இருந்தாலும் உரையாடலிலிருந்து அவன் ஒதுக்கப்பட முடியாது (Ismail & Uyuni, 2020). மேலும், அல்குர்ஆனில் பல வகையான உரையாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன. குறிப்பாக, இறைவிசுவாசிகள், இறைமறுப்பாளர்கள், சந்தேகம் கொண்டவர்கள், நயவஞ்சகர்கள், கருத்து வேறுபாடு கொண்டவர்கள் போன்றவர்களுக்கிடையில் பல விடயங்கள் தொடர்பாக உரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன (Tahir et al, 2023).

**நபியவர்கள் முஸ்லிம் அல்லாதவர்களுடன் மேற்கொண்ட உரையாடல்கள்**

நபி (ஸல்) அவர்கள் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அமைதியானதும் பாதுகாப்பானதுமான வழிமுறைகளைக் கையாண்டு, மாற்றுக் கருத்துடையவர்களுடன் போர் புரிவதைத் தடுத்து உரையாடலின் மூலமாகத் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். சமாதானம் மற்றும் அமைதியை நாடி மேற்கொள்ளப்படுகின்ற வழிமுறைகளில் இது மிகவும் முதன்மையானதாகும் (அல்குர்ஆன், 08:61). முஸ்லிம்கள் சமாதானத்தை முழுமையாக நேசிக்க வேண்டும் என்றும் அவர்களுடைய உரிமைகள் எக்காரணம் கொண்டும் மீறப்படக்கூடாது என்றும் சுட்டிக்காட்டுகிறது (Abbas, 2023). மக்காவாசிகள்

நபியவர்களுக்கும் ஸஹாபாக்களுக்கும் பல்வகையான தொந்தரவுகளையும் நோவினைகளையும் கொடுத்துக் கொண்டிருந்த போதெல்லாம் நபியவர்கள் அம்மக்களை நரக நெருப்பிலிருந்து பாதுகாப்பதற்காக, அவர்களின் நேர்வழிக்காக பிரார்த்தனை செய்து கொண்டு இருந்தார்கள். மேலும், நபியவர்களுடைய முழு வாழ்வும் சொல்லாலும் செயலாலும் சமாதானத்தைப் பரப்பி அழகிய முறையில் உரையாடலை மேற்கொள்ளும் முகமாகவே அமைந்திருந்தது (Fatmir, 2008).

மஹ்மூத் ஷல்தூத் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். "நிச்சயமாக சமாதானம் மனிதர்களுக்கிடையில் பரஸ்பரத்தையும் நலவையும் ஏற்படுத்துவதற்கான அடிப்படையாகும். முஸ்லிமல்லாதவர்கள் சமாதானத்தின் மூலமாக பாதுகாக்கப்படுகின்ற பொழுது அவர்களும் முஸ்லிம்களும் இஸ்லாத்தின் பார்வையில் மனிதச் சகோதரர்களாவர் (Ramzy & Qolam, 2019). சமயக் கலந்துரையாடல் ஒன்றை அல்குர்ஆன் அல்லாத எந்தவொன்றின் மூலமாகவும் எடுத்துக்கொள்ள முடியாது. இது வன்முறைகளைக் களைந்து வேற்றுமைகளை ஏற்றுக்கொண்டு சமூகம் சார் நலவுகளை மனிதர்களுக்கிடையில் நிலைநாட்ட உறுதியாக அமையும் (Rofiqi & Haq, 2022).

**மக்காவில் நபியவர்கள் மேற்கொண்ட குறைஸித் தலைவருடனான உரையாடல் :**

குறைஷித் தலைவர்களில் ஒருவரான உத்பா இப்னு ரபீஆ என்பவருடைய உரையாடல் பற்றி இப்னு ஹிஷாம் அவர்கள் "ஸீரா" எனும் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். அதில் இருவரும் அமர்ந்து கொண்டிருந்த பொழுது உத்பா "எனது சகோதரரின் மகனே! நிச்சயமாக நீங்கள் எமது குடும்பத்தில் உயர்ந்த அந்தஸ்துடைய, உயர்ந்த பரம்பரையைச் சேர்ந்தவர். நிச்சயமாக நீங்கள் சமூகத்தில் பிளவை ஏற்படுத்தும் ஒரு விடயத்தைக் கொண்டு வந்துள்ளீர். எங்களது அறிஞர்களை மடையராக்குகின்றீர்கள், கடவுளர்களை நிந்திக்கின்றீர்கள், நம் மூதாதையர்கள் இறைவனை நிராகரித்ததாக கூறுகிறீர்கள், எனவே, நான் உங்களுக்குச் சில விடயங்களைக் கூறுகிறேன் கேட்டுக் கொள்ளுங்கள்" என்று கூறினார். அப்பொழுது நபியவர்கள் அபுல் வலீதே! நீங்கள் கூறுங்கள் நான் கேட்டுக்கொள்கிறேன் என்றார்கள். அப்பொழுது உத்பா பேச ஆரம்பித்தார். பேசி முடிந்ததும் நபியவர்கள் அபுல் வலீதே நீங்கள் பேசி முடித்து விட்டீர்களா? எனக் கேட்க, அதற்கவர் ஆம் எனக்கூறினார். அப்பொழுது நபியவர்கள் நான் கூறுவதை நீங்கள் கேளுங்கள் என்று கூறி விட்டு ஸூறா "புஸ்ஸிலத்தின்" சில வசனங்களை ஓத ஆரம்பித்தார்கள். ஓதி முடித்ததும் நபியவர்கள் ஸஜதா செய்தார்கள். பிறகு நபியவர்கள் உத்பாவிடம் அபுல் வலீதே! நான் கூறிய விடயங்களைச் செவிமடுத்தீர்களா? என்று கேட்டதும் உத்பாவும் அவரது சகோதரர்களும் எழுந்து சென்று விட்டார்கள். அபுல் வலீத் சென்ற முகத்துடன் அல்லாது வேறு முகத்துடன் வந்து உத்பாவிடம் நபியவர்கள் தமக்கு இஸ்லாமிய அழைப்பு விடுத்ததாக கூறியதும் அவர்களில் சிலர் அதனை மறுத்து விட்டு அபுல் வலீதே அவர்தெனது பேச்சால் உங்களை மயக்கிவிட்டார் என்று கூறினார் (Akhter et al, 2023). இந்த உரையாடலானது நபியவர்களின் உரையாடல் ஒழுக்கவியலை எடுத்துக்காட்டுகின்றது.

**மக்கா வெற்றியின் போதான உரையாடல்**

நபியவர்கள் மக்கா வெற்றி கொள்ளப்பட்ட பொழுது அதன் குடிமக்களான இணைவைப்பாளர்களை எவ்வித தண்டனைக்கும் உட்படுத்தாமல் சமயச் சுதந்திரத்தின் அடிப்படையில் சுதந்திரமாக விட்டுவிட்டார்கள். அவர்களை இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தவோ அல்லது கொலை செய்யவோ இல்லை.

மாறாக அவர்கள் அனைவரையும் மனிதர்கள் என்ற அடிப்படையில் மன்னித்து விட்டார்கள். மேலும், மக்கா வெற்றியின் பின்னர் கஃபாவின் திறப்பு உம்மு உஸ்மான் பின் தல்ஹாவிடம் இருப்பதைக் கேள்விப்பட்ட நபியவர்கள் அதனை மீண்டும் அம்மக்களிடம் ஒப்படைத்து விடுமாறு கட்டளையிட்டார்கள் (Al-Khudairi, 2018).

பின்னர் நபியவர்கள் மக்களை நோக்கி "நான் உங்களுக்கு என்ன செய்வேன் என்று நினைக்கிறீர்கள்" எனக் கேட்டார்கள். அப்பொழுது ஸுஹைல் இப்னு அம்ர் "நாங்கள் நலவையே எதிர்பார்க்கிறோம், நலவையே எண்ணுகிறோம், நிச்சயமாக நீங்கள் எங்களில் கண்ணியமானவர், கண்ணியமானவரின் மகன் எனக்கூறினார். அதற்கு நபியவர்கள் யூஸுப் (அலை) அவர்கள் தனது சகோதரர்களுடைய விடயத்தில் கூறிய அல்குர்ஆன் 12:92 வார்த்தையே நான் உங்களுக்குக் கூறுகிறேன் எனக்கூறினார்கள். எனவே, நபியவர்களுடைய இவ்வுரையாடல் மனித நேயத்தில் மன்னிப்பை அடிப்படையாகக் கொண்ட ஓர் உரையாடலாகக் காணப்படுகின்றது. இதற்கு முன்னர் நபியவர்களுடைய வரலாற்றில் இப்படி ஓர் உரையாடல் மன்னிப்பு ரீதியாக நடந்தது கிடையாது (Boubakri, 2022).

**மதீனாவில் நபியவர்கள் மேற்கொண்ட உரையாடல்கள்**

நபியவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு இடம்பெயர்ந்து சென்றபோது அங்கு யூதர்கள் பல பிரிவினர்களாக இருப்பதைக் கண்டு மதீனா சாசனம் என்ற உடன்படிக்கையை உரையாடலின் அடிப்படையில் மேற்கொண்டார்கள். அதன் வாசகம் "இது அல்லாஹ்வின் தூதராகிய முஹம்மதிடம் இருந்து முஸ்லிம்கள், முஃமின்கள் மற்றும் மதீனா வாசிகளுக்கும் அவர்களை பின்பற்றி வரக்கூடியவர்களுக்குமிடையிலான உரையாடலாக இருக்கும். நிச்சயமாக இவர்கள் அனைவரும் மனித சமூகத்தினர் மட்டுமே. யூதர்களில் யார் யாரெல்லாம் எங்களைப் பின்பற்றுகின்றார்களோ அவர்களுக்கு உதவியும் அழகிய முன்மாதிரியும் உண்டு. அவர்கள் அநீதியிழைக்கப்படமாட்டார்கள்." இந்தச் சாசனம் தான் மனித வரலாற்றில் மனித உரிமைகளுக்கான முதலாவது மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டமாகக் காணப்படுகிறது. நபியவர்கள் யூதர்களுடனும் கிறிஸ்தவர்களுடனும் பல உரையாடல்களை மேற்கொண்டதற்கான அல்–குர்ஆன் 03:64 போன்ற ஆதாரங்கள் பல காணப்படுகின்றன (Muthaliff, 2020).

**முனாபிக்களுடனான உரையாடல்**

நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் பலதரப்பட்ட பிரிவினர்களாகவும் ஆளுமையுள்ளவர் களாகவும் இருந்த முனாபிக்களுடனும் உறவாடியிருக்கிறார்கள். அவர்களில் முதன்மையானவனான அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு ஸலூல் என்பவன் ஒரு தடவை முஹாஜிரி ஸஹாபாக்களை எச்சரிக்கும் முகமாக "நிச்சியமாக நாங்கள் மதீனாவுக்கு மீண்டால் எங்களில் கண்ணியமானவர்கள் இழிவானவர்களை வெளியேற்றிவிடுவோம்" என்று கூறினான். இத்தகவல் நபியவர்களுக்கு எத்திவைக்கப்படபொழுது, நபித்தோழர்கள் அவனைக் கொன்றுவிட அனுமதி கோரினார்கள். அப்போது நபியவர்கள் "மக்களில் யாரும் நபியவர்களின் தோழர்கள் தங்களுக்குள் முரண்பட்டு கொலை செய்வதாக பேசிவிடக்கூடாது" என்று கூறி சமாதானமாக அனுப்பினார்கள் (Tahir et al, 2023). நபியவர்கள் முனாபிக்குகளின் சிறப்புக்களைப் பற்றிக் கூறி அவர்களுடன் சகோதரர்களாக சேர்ந்து வாழ்ந்ததோடு அவர்களின் தலைவர்களில் மரணித்தவர்களுக்காக தொழுகையும்

நடாத்தியிருக்கிறார்கள். நபியவர்கள் முனாபிக்களுடனான உரையாடல்கள் மனத்தூய்மையுடன் இருக்க வேண்டும் எனக் கூறியிருக்கிறார்கள். ஒரு முறை அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு ஸலூல் உடைய மகன் நபியவர்களிடம் வந்து தனது தந்தையைக் கொலை செய்ய அனுமதி கேட்ட பொழுது நபியவர்கள் "நாங்கள் அவருடன் அழகிய முறையிலேயே நடந்து கொள்கிறோம்" (இப்னு ஹிஷாம், 828) என்று கூறி மறுத்துவிட்டார்கள் (Kahouni, 2020).

**நபியவர்கள் மன்னர்களுக்கு அனுப்பிய கடிதங்கள்**

நபியவர்களின் முஸ்லிமல்லாதவர்களுடனான உரையாடல் வார்த்தைகளின் மூலமாக மட்டுமல்லாது எழுத்து வடிவிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நபி (ஸல்) அவர்கள் ரோம் பிரதேச மன்னரான ஹிர்கலுக்கு பாரஸீக வெற்றியின் பொழுது எழுதியனுப்பிய கடிதங்கள் இதற்குச் சான்றாகும். அதில் நபியவர்கள் ஹிர்கல் மன்னரை "ரோம் சாம்ராஜ்யத்தின் பேரரசரே!" என விழித்து கண்ணியப்படுத்தியிருந்தார்கள். மேலும், ரோம் மன்னர்களைக் கண்ணியப்படுத்தியும் புகழ்ந்தும் ஸலாம் கூறியும் கடிதங்கள் எழுதிருக்கின்றார்கள். அதன் பின்னர்தான் இஸ்லாமிய அழைப்பை முன்வைத்தார்கள். நபியவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு தனது அதிகாரத்தை பயன்படுத்தாமல் நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் உங்களுக்கு இரண்டு கூலிகள் உண்டு என்று குர்ஆன் வசனத்தைக் கூறி அக்கடிதத்தை முடித்தார்கள். இதனால் ஹிர்கல் மன்னன் அக்கடிதத்தொடர்பை வரவேற்றிருந்தார் (Imad, 2014).

**நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்களுடனான உரையாடல்**


நஜ்ரான் பிரதேசத்திலிருந்து ஒரு குழுவினர் நபியவர்களுடைய த.ஃவாவின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதற்காக உயர்ந்த பட்டாடைகளை நபியவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அன்பளிப்பாகக் கொண்டு வந்தனர். அப்பொழுது நபியவர்கள் அவர்களை அழகிய முறையில் வரவேற்று அவர்களுடனான உரையாடலைப் பள்ளிவாயலில் மேற்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கான தனியான பாதையும் அதற்குரிய ஏற்பாடுகளையும் செய்து கொடுத்திருந்தார்கள் என அல்குர்ஆன் 03:61 குறிப்பிட்டுக் காட்டுகின்றது (Muthaliff, 2020).

**இலங்கை அரச பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்களின் நிலை**

இது ஆய்வின் இரண்டாவது நோக்கத்திற்கான பெறுபேறுகளைக் கண்டறிவதற்கு முயற்சிக்கின்றது. அவ்வடிப்படையில் இலங்கை அரச பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்களிடம் சமயக் கலந்துரையாடல் எவ்வாறு நடைமுறையில் காணப்படுகின்றது என்பதை விபரிக்கும் வகையில் இது அமையப்பெற்றுள்ளது.


**பங்குபற்றுனரின் சுய விபரம்**

இவ்வாய்வின் நோக்கத்தை அடையும் பொருட்டு, தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களிடம் வினாக்கொத்து விநியோகிக்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. அதில் அதிகமாக பெண்கள் (70%) தகவல் தருனர்களாகக் காணப்படுகின்றனர். இதனைப் பின்வரும் வரைபடம் காண்பிக்கின்றது.




மூலம்: (ஆய்வாளர்கள், 2024)

ஆய்வு தொடர்பான தகவல் தருனரின் கல்வியாண்டு விபரம் பற்றிய வினாக்கள் என்பதனுள் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் வருடம் ஆகியவை உள்ளடக்கப்பட்டன. இதில் அதிகமாக மூன்றாம் வருட மாணவர்கள் தகவல் வழங்கியுள்ளனர். இதனைப் பின்வரும் வரைபடம் காண்பிக்கின்றது.




மூலம்: (ஆய்வாளர்கள், 2024)

**பெறுபேறுகள்**

ஆய்வுத்தலைப்புக்கு அமைவாக இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்களிடம் சமயக் கலந்துரையாடல் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதன் முடிவுகள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

| | விபரம் | 5 | 4 | 3 | 2 | 1 |
|---|---|---|---|---|---|---|
| 1 | பிற சமயத்தவரை சக மனிதனாக நோக்குதல் | 42% | 47% | 8% | 0% | 3% |
| 2 | அழகிய முறையில் கலந்துரையாடுதல் | 52% | 37% | 3% | 5% | 3% |
| 3 | உரையாடலுக்கான நிபந்தனைகள் பற்றிய விழிப்புணர்வு | 49% | 35% | 11% | 5% | 0% |
| 4 | உரையாடலுக்கான இலக்குகள் பற்றிய விழிப்புணர்வு | 26% | 47% | 9% | 15% | 3% |
| 5 | பொது விடயங்கள் தொடர்பான உரையாடல் | 53% | 29% | 15% | 0% | 3% |
| 6 | தனிப்பட்ட விடயங்கள் தொடர்பான உரையாடல் | 25% | 29% | 34% | 9% | 3% |
| 7 | அடிப்படை நம்பிக்கை தொடர்பில் கலந்துரையாடுதல் | 30% | 30% | 24% | 11% | 5% |
| 8 | இஸ்லாமியப் போதனையை கலந்துரையாடுதல் | 28% | 47% | 19% | 6% | 0% |
| 9 | அல்குர்ஆனை செவிமடுப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் | 27% | 35% | 30% | 8% | 0% |

அட்டவணை:01 சமயக் கலந்துரையாடல் தொடர்பாக அரச பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்களின் நிலை

மூலம்: (ஆய்வாளர்கள், 2024)

அல்குர்ஆன் பல வசனங்களில் சமயக்கலந்துரையாடலை மேற்கொள்ளுமாறு தூண்டுகிறது. குறிப்பாக வேதவாசிகளுடனான சமயக் கலந்துரையாடலை குறிப்பிட்டுக் காட்டுகிறது. எனவே, இஸ்லாம் முன்னைய நபிமார்களுக்கு அனுப்பப்பட்ட ஏகத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அனைத்து சமயத்தவர்களுடனும் தெளிவான முறையில் புரிந்துணர்வுடன் சமயக்கலந்துரையாடலை மேற்கொள்ளுமாறு கூறுகிறது (Boubkeri, 2022).

இஸ்லாமிய சமயத்தைப் பொறுத்தவரையில் இச்சமயம் முஸ்லிம்களுக்கு மாத்திரம் சொந்தமான ஒன்றல்ல. மாறாக, அனைத்து மனிதர்களுக்கும் உரித்துடையது என்பதை அல்லாஹ் தன்னைப் பற்றியும் தனது திருமறை பற்றியும் தனது தூதர் பற்றியும் அல்குர்ஆனில் தெளிவுபடுத்தியுள்ள விடயங்கள் சான்றுபகர்கின்றன.

அல்லாஹ் தன்னைப் பற்றி அறிமுகம் செய்யும் போது 'அனைத்துப் புகழும் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே ஆகும்' (அல்பாத்திஹா: 01). இவ்வசனத்தில் அல்லாஹ் தன்னை அகிலங்களின் இறைவனாக அறிமுகப்படுத்துகிறான். இதில் அனைத்து மனிதர்களும் உள்வாங்கப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. அவ்வாறே வழிகாட்டியாக அருளப்பட்ட அல்குர்ஆனைப் பற்றிக் குறிப்பிடும் போது 'ரமளான் மாதம் எத்தகையதென்றால் அதில்தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், நேரான வழியைத் தெளிவாக்கக்கூடியதாகவும், (நன்மை–தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான குர்ஆன் இறக்கியருளப்பட்டது (அல்பகரா:185). இவ்வசனத்திலும் அல்குர்ஆன் அனைத்து மனிதர்களுக்குமுரியது என்பது புலனாகிறது.

அதுபோன்றே தனது தூதரைப் பற்றிக் குறிப்பிடும் போது '(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ஓர் அருளாகவேயன்றி அனுப்பவில்லை. (அல்அன்பியா: 107) இவ்வசனத்திலும் நபி (ஸல்) அவர்கள் அனைத்து மனிதர்களுக்கும் சொந்தமானவர்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, இஸ்லாத்தின் பிரதான விடயங்களான அல்லாஹ், வேதம் மற்றும் தூதர் ஆகியவைகள் அனைத்து மனிதர்களுக்கும் உரித்துடையதாக போதித்திருப்பதானது இஸ்லாத்தில் மனிதர்களின் கௌரவம் உயர்வாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

மனிதர்கள் அனைவரும் ஆதம் – ஹவ்வா ஆகிய இருவரிலிருந்தும் தோற்றுவிக்கப்பட்டுள்ளதால் அனைத்து மனிதர்களையும் நிறம், மதம், குலபேதமின்றி சகோதரர்களாக நோக்குமாறு அல்குர்ஆன் கட்டளையிட்டுள்ளதைக் காணமுடிகின்றது. "மனிதர்களே உங்களை ஓர் ஆத்மாவிலிருந்து படைத்து, அதிலிருந்து அதன் சோடியைப் படைத்து, அவ்விருவரிலிருந்து அதிகமான ஆண்களையும் பெண்களையும் பரவலாக உண்டுபண்ணிய அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள் (அந்நிஸா: 01). அனைத்து மனிதர்களையும் சகமனிதர்களாக நோக்குமாறு கூறியுள்ள மேற்படி இஸ்லாத்தின் போதனைகள் பல்கலைக்கழகச் பன்மைத்துவ சூழலில் நடைமுறைப்படுத்தப்படுவதை இவ்வாய்வு வெளிக்கொணர்ந்துள்ளது. சுமார் 89% வீதமான மாணவர்கள் இதனை நடைமுறைப்படுத்துவதைக் காணமுடிந்துள்ளது.

எச்சமயத்தைச்சார்ந்த மனிதர்களாக இருந்தாலும் அவர்களுடன் நன்முறையில் கலந்துரையாடுமாறு இஸ்லாம் பணித்துள்ளது. "உமது இரட்சகனின் பாதையின் பால் ஞானத்துடனும் அழகிய உபதேசத்துடன் அழைப்பு விடுப்பீராக. அவர்களுடன் மிகவுமே அழகிய வழிமுறைகள் மூலமாகவே கருத்துப் பரிமாறல்

செய்வீராக” (அந்நஹ்ல்: 125)இன்னும், நீங்கள் வேதத்தையுடையவர்களுடன் அவர்களில் அநியாயம் செய்தவர்களைத் தவிர, (மற்றவர்களுடன்) அழகிய முறையிலே அன்றித் தர்க்கம் செய்யாதீர்கள் (அல்அன்கபூத் :46). இத்தகைய இஸ்லாத்தின் போதனைகள் பல்கலைக்கழக மட்டத்தில் செயற்படுத்தப்பட்டுள்ளதை 89% வீதமான மாணவர்களின் வாக்குகள் சான்றுபகர்கின்றன.

இஸ்லாமிய போதனைகளை எத்திவைப்பதற்கும் உரையாடுவதற்கும் இஸ்லாம் அனுமதித்துள்ள அதேவேளை நிபந்தனைகள் மற்றும் இலக்குகளை மீறி பலவந்தமாக சமயத்திற்கு பிற மனிதர்களை உள்ளீர்ப்பதற்கு இஸ்லாம் அனுமதிக்கவில்லை. “மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை” (அல்பகரா: 256), “மக்கள் விசுவாசிகளாக மாற நீர் அவர்களை நிர்ப்பந்திக்கிறீரா?” (யூனுஸ்:99), “நீர் அவர்கள் மீது பொறுப்புச் சாட்டப்பட்டவர் அல்லர்” (அல்காஷியா:22). இத்தகைய அல்குர்ஆன் வசனங்கள் மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை என்பதை எடுத்துக்காட்டுவதோடு, 83% மற்றும் 73% வீதமான மாணவர்கள் தமது உரையாடலை இஸ்லாமிய நிபந்தனைகள் மற்றும் அதன் இலக்குகளுக்குள் நின்று கருத்துப்பரிமாறுவதை இவ்வாய்வு வெளிக்கொண்டுள்ளது.

மேலும், தனிப்பட்ட விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் குறித்த அளவில் (54%) நடைமுறையில் இருப்பதை இவ்வாய்வின் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும் இஸ்லாம் தொடர்பான கலந்துரையாடல் கூடிய அளவில் (75%) காணப்படும் அதேவேளை அடிப்படை நம்பிக்கைசார் விடயங்கள் பற்றிய கருத்துப் பரிமாற்றம் என்பது ஓரளவு அதிகமான அளவில் (60%) இருப்பதும் ஆய்வாளர்களினால் அவதானிக்க முடிந்தது. மேலும் அல்குர்ஆனை செவிமடுப்பதற்கான சந்தர்ப்பத்தை முஸ்லிம் மாணவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பதையும் இவ்வாய்வு வெளிக்காட்டியுள்ளது.

**பரிந்துரைகள்**

- ✓ பல்சமய கலந்துரையாடலுக்கான மாணவர் ஆய்வு மன்றங்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை ஏனைய சமய நிறுவனங்களோடு இணைந்து முஸ்லிம் மஜ்லிஸ் மேற்கொள்ளல்.
- ✓ சமயங்களுக்கிடயிலான புரிதலை ஏற்படுத்துவதற்கான பொது நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல்.
- ✓ இஸ்லாம் மற்றும் பிறசமயங்கள் தொடர்பில் காணப்படுகின்ற சந்தேகங்களை கேள்வி–பதில் முறையில் தெளிவுபடுத்த வாய்ப்பளித்தல்.
- ✓ இஸ்லாம் வலியுறுத்தும் சமயக் கலந்துரையாடலின் முக்கியத்துவத்தை பல்கலைக்கழக முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத மாணவர்கள் மத்தியில் தெளிவுபடுத்துவதில்
- ✓ இஸ்லாமிய நிறுவனங்கள் தொழிற்படல்.
- ✓ இலங்கையில் காணப்படுகின்ற சர்வமத அமைப்புக்களில் நேரடி வழிகாட்டலின் கீழ் அனைத்து மதம் மற்றும் சமயங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புக்களை ஒன்றிணைத்து பொதுவெளியில் சமயக் கலந்துரையாடலை மேற்கொள்ளல்.

**முடிவுரை**

இஸ்லாமிய அறிஞர்கள் மனிதர்களின் தேவைகளை ஐந்து எனவும் மற்றும் சிலர் ஆறு எனவும் குறிப்பிட்டுள்ளனர். அவை ஹிப்ழுத் தீன் (மார்க்கத்தைப் பாதுகாத்தல்), ஹிப்ழுந் நப்ஸ் (உயிரைப் பாதுகாத்தல்),

ஹிப்ழுல் அக்ல் (பகுத்தறிவை பாதுகாத்தல்), ஹிப்ழுந் நஸ்ல் (பரம்பரையைப் பாதுகாத்தல்), ஹிப்ழுல் இர்ழ் (மானத்தைப் பாதுகாத்தல்) மற்றும் ஹிப்ழுல் மால் (பொருளாதாரத்தைப் பாதுகாத்தல்) ஆகியனவாகும். எனவே, மனித கண்ணியத்தை நிலைநாட்டுவதற்காக, தான் விரும்புகின்ற மார்க்கத்தைப் பின்பற்றுவதற்கு அவனுக்குப் பூரண சுதந்திரம் இருக்கிறது. இது பிறரை ஏற்றுக்கொள்வதற்கான அடையாளமாகக் காணப்படுகின்றது. மேலும் வாதாட்டங்கள், விவாதங்கள் நவீன காலத்திலும் மத்திய காலத்திலும் ஆன்மீகம், சமாதானம், பொருளாதரம் மற்றும் பண்பாட்டு ரீதியாக அழிவுகளையே ஏற்படுத்தி இருக்கின்றன. எனவே இவ்விடயத்தில் வாதாட்டத்தை முழுமையாக களைந்தெறிவதில் கவனமாக இருக்க வேண்டும். முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்களுடன் அவர்களுடைய மொழிகளைக் கற்று உரையாடல்களை மேற்கொள்ள வேண்டும். ஒரு மனிதன் மோசமானவராக இருந்தாலும் அழகிய பண்பாடுகளுடன் நடந்து கொள்ள வேண்டும். இதற்காக சமய நல்லிணக்கத்தைப் பிரதான கருப்பொருளாகக் கொண்டு இயங்குகின்ற நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் உரிய நிகழ்ச்சித் திட்டங்களை பிராந்திய ரீதியாகவும் இலங்கை முழுவதும் நடாத்துவதற்கு வழிவகைகளை மேற்கொள்வதன் மூலம் பன்மைத்துவ சமூகக்கட்டமைப்பைக் கொண்ட இலங்கை நாட்டை நிரந்தர சமாதானமுடைய நாடாக மாற்றலாம் என்பது திண்ணம்.

**உசாத்துணைகள்**


Abbas, S. M., Falak, N., Khan, M. K., Younas, M., Riaz, T., & Asif, M. (2023). Islamic Perspective of Dialogue among Civilizations for Global Peace and Co-Existence. Russian Law Journal, 11(12s), 513-519.

Akhter, Z. (2024). Prospects of Multi-Track Diplomacy in India-Pakistan Relations. Manohar Parrikar Institute for Defence Studies and Analyses.

Alhabib Ali Al Jifri. (2011, Augest 04). Hivaru Athbayil Adyan (Vedio). Youtube. Https://Www.Youtube.Com/Watch?V=Eplhd5db-N0

Aljazeera Channel. (2009, October 28). Hivarul Adyan (Vedio). Youtube. Https://Www.Youtube.Com/Watch?V=W5-Fqnbimgk&T=16s

Al-Khasawneh, E. A. (2014). Types of Da'wah Dialogue And Their Priorities In The Holy Quran: A Thematic Study.

Al-Khudairi, & Fahda Al-Khudairi. (2018). the Culture of Dialogue in Islam: A Descriptive, Analytical, and Critical Study. Journal of the College of Islamic and Arabic Studies for Girls In Alexandria, 34(1), 537-589.

Bakari, A.C (2021). Coexistence between Peoples and Civilizations "Memories of the Past and Ambition of the Present" Majalathul Mavaqif Llil Buhoosi Vad Dirasathi Fil Mujthamai Vaththareekh, 17, 1049-1076. Issn: 1112-7872

Boubkeri (2022). Religious Dialogue and the Foundations of Coexistence between Religions, an Analytical Reading in the Meaning of Dialogue According To Muhammad Talbi. Enlightenment Collection's, 12(1), Issn 2716-7852

Boubkeri (2022). The Religious Dialogue of Muhammad Al-Talbi and the Foundations

of Interreligious Coexistence. Majallathul Muqarabathun Falsafiyyah. 9 (1), 142-154, Issn : 2352- 9776

Deena, M.K. (2017). Al Hivaru Wa Dawruhu Fee Tharseekhi Ususuth Thayayush Silmi. Journol of Imara Wal Funoon, 6, 1-9. Doi: 10.12816/0038031

Eesa A.K. (2020).Al Hivaru Fil Quraani Vas Sunnah Va Mouqiful Islami Min Gairil Muslimeen. Athirasathul Islamiyyah. 1, 55

Fatmir, S. (2008). Religious Dialogue between Qur'an and Contemporary Practices -Islam in Asia. International Islamic University Of Malasiya Journal of Isalm in Asia, 5 (1).

Imad. A.K. (2014). Invaul Hivarith Thaviyyi Va Muqifuhu Fil Quran. Journal of Islamic Studies: Jordan, 11(4), 9-28.

Ismail, A. I., & Uyuni, B. (2020). The New Perspective of Interfaith Dialogue as Da'wah Approach in Global Era. Journal of Xidian University, 14(3), 1540-1552.

Ivascu, L., Ali, W., Khalid, R., & Raza, M. (2022). The Impact of Competitive Strategies On Performance Of Banking Sector; The Mediating Role Of Corporate Social Responsibility And Operational Excellence. Energies, 16(1), 297.

Kahouni, & Eissa Abdullah Ali. (2020). Dialogue in the Quran and Sunnah and Islam's Stance on Non-Muslims.

Mahroof, S. R., & Razick, A. S. (2020). Misconceptions and Consequences of the 'Other'in the Sinhala Buddhist-Muslim Relationship in Sri Lanka. ESENSIA: Jurnal Ilmu-Ilmu Ushuluddin, 23(2)

Melnik,S.(2020).Types of Interreligious Dialogue Journal Interreligious Studies,31,48-72.

Mihlar (N.D). The Concept of Religious Dialogue and Its Provisions in Islamic Law. E-Proceedings of the International Conference on Aqidah, Religions and Social Sciences, 425-431.

Minsara, J.F. (N.D). Samooha Nallinakkam: Ilankai Boutha – Muslim Uravuhalai Adippadaiyahak Konda Or Ayvu. 4th International Symposium Fia, Seusl, 574-585.

Mo 7 Md Tv. (2022, June 27). Ala Moulooyi Hivaril Adyan (Vedio). Youtube. Https://Www.Youtube.Com/Watch?V=Fsot18sbu0w

Morrison, C. (2020). Post-conflict interfaith activities, combatting religious extremism and mass atrocity in Sri Lanka. Revista de Paz y Conflictos, 13(1), 99-124.

Muthaliff, M. M.A. (2020). The concept of religious dialogue and its provisions in Islamic law. Usuli Faqih Research Centre PLT, 425–431.

Nawaz, M., Aleem, A., & Mahmood, N. (2022). Interfaith Dialogue from the Perspective of Quran and Sunnah: A Solution for Peacemaking & Interfaith Harmony in Pakistan.

Al-Qamar, 5(2), 19-32.

Okawa, S., Arai, H., Sasagawa, S., Ishikawa, S. I., Norberg, M. M., Schmidt, N. B., & Shimizu, E. (2021). A Cross-Cultural Comparison of the Bivalent Fear of Evaluation Model for Social Anxiety. Journal of Behavioral and Cognitive Therapy, 31(3), 205-213.

Paul Rohan, J. C. (2021). Challenges and Opportunities for Co-Existence: A Sri Lankan Christian Perspective.

Ramli, A. F., Ashath, M., & Moghri, A. (2023). A comparative study on the notion of dialogue in Islam and Buddhism. Afkar: Jurnal Akidah & Pemikiran Islam, 25(2), 67-110.

Ramzy, M.I., & Qolam, D. (2019). Understanding "The Others": Buddhist - Islamic Dialogue for Peace with Particular Reference to 'Moderation'. Al-Shajarah Journal of Islamic Thought and Civilization of the International Islamic University Malaysia (Iium), 124(1),

Raza, A. A., & Khalid, M. S. (2022). Interfaith Dialogue: Ethical Commonalties in Judaism, Christianity and Islam. Islamic Studies Research Journal Abhath, 7(26).

Rifa Mahroof, S. (2021). A critical review of the misconceptions and reconciliation between the Sinhalese Buddhists and Muslims in Sri Lanka.

Rofiqi, M. A., & Haq, M. Z. (2022). Islamic Approaches in Multicultural And Interfaith Dialogue. Integritas Terbuka: Peace and Interfaith Studies, 1(1), 47-58.

Shafeen, M. A. M., Careem, A., & Aroos, A. (2024). The Role of Songs in Promoting Interreligious Understanding in Multi-Religious Sri Lanka: An Islamic Aesthetic Analysis. Jurnal Usuluddin, 52(1), 171-196.

Sheefa.M.I. & Ismiya Begum, M.S. (2021). Sahavaalvu Matrum Samooha Otrumaiyai Valiyuruthuvathil Samayankalin Vahipaham: Islam, Hindu, Boutham Matrum Kiristhava Samayankalin Kotpaduhalai Maiyappaduthiyaaayvu... Proceedings of 8th International Symposium, Fia, Seusl.180-195.

Shehu, F. (2017). The Scholarship of Inter-Faith Engagement in the Writings of Selected Contemporary Muslim Scholars. Al-Qanatir: International Journal of Islamic Studies, 6(2), 40-48.

Silva, K. T. (2019). Religious Diversity and Interreligious Contestations in Sri Lanka: The Encounter between Buddhism and Islam in the Galebandara Cult in Kurunagala. In Religious Diversity in Asia pp. 243-267

Tahir, M., & Wijaya, I. S. (2024). Effectiveness of Interreligious Literacy in Preventing Radical Views in Higher Education: Narrative Inquiry Research. International Journal of Instruction, 17(1), 157-176.

Usama, M.A. (2015). Al Hivaruth Deeni Bainal Islam Wal Maseehiyyah Wa Asaruhu Alath Thayayushis Silmi. Digital Responcibility – International University of Africa, Http://Dspace.Iua.Edu.Sd/Handle/123456789/4493

Wagay, A. H. (2022). Interfaith dialogue: A qur‟ anic cum prophetic perspective. South Asian Res J Human Soc Sci, 4(6), 350-358.